பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
11 08 2024 **SUNDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. **Timor Leste** நாட்டின் உயரிய விருது, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவுக்கு வழங்கப்பட்டுள்ளது பெருமிதம் அளிக்கக்கூடியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங்கின் மறைவிற்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

3. ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

4. தமிழ் வளர்ச்சித்துறையில் உள்ள உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு முதுநிலை தமிழ் பட்டப் படிப்பு பயின்ற 50 சதவீதம் பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

5. சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தின் உயரிய விருது, இந்தியாவின் **Abhinav Bindra**-வுக்கு வழங்கப்பட்டது.

>>>>><<<<<

**Timor Leste** நாட்டின் உயரிய விருது, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவுக்கு வழங்கப்பட்டுள்ளது பெருமிதம் அளிக்கக்கூடியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், திருமதி. திரௌபதி முர்மு பல ஆண்டுகளாக பொதுவாழ்வில் ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்கான அங்கீகாரம் இந்த விருது என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங்கின் மறைவிற்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், நாட்டிற்காக அவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், வெளியுறவுக் கொள்கை மற்றும் பிற நாடுகளுடனான நல்லுறவை பராமரிப்பதில் நட்வர்சிங் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

இன்று புதுதில்லியில் இந்த இயக்கம் தொடர்பாக நடைபெற்ற பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இதேபோல், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பேரணிகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

உத்தரபிரதேசத்தில் இந்த இயக்கத்தின்கீழ் தேசியக்கொடியை ஏந்திச் செல்லும் பேரணி இன்று தொடங்கியுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

403 சட்டப்பேரவை தொகுதிகளிலும் இந்தப் பேரணி நடைபெறவுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மருத்துவர்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திர ஓட்டத்தை மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

பிரதமரின் பழங்குடியினருக்கான வீட்டு வசதி திட்டத்தை செயல்படுத்துவதில் மத்தியப்பிரதேச மாநிலம் முன்னோடியாக திகழ்கிறது என்று அம்மாநில அரசு கூறியுள்ளது.

**Shivpuri-**யில் பழங்குடியினருக்கான குடியிருப்பு பகுதியை ஆய்வு செய்த அம்மாநில அமைச்சர் திரு. பிரஹலாத் பட்டேல் இதனை தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ், மத்தியப்பிரதேசத்தில் 1 லட்சத்து 13 ஆயிரத்து 433 வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதில், முதல்கட்டமாக 22 ஆயிரத்து 619 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

**Shivpuri-**யில் மட்டும் 443 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

**>>>>><<<<<**

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

அனந்தநாக் மாவட்டத்திற்கு உட்பட்ட **Ahlan** பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டது.

இதில் ராணுவ வீரர்கள் இரண்டு பேர் உயிர்த்தியாகம் செய்தனர். பொதுமக்கள் 2 பேர் காயமடைந்தனர்.

அப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நேபாளம் சென்றடைந்தார்.

காத்மண்டு விமானநிலையத்தில் வெளியுறவுத்துறை அதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

நேபாளத்தின் வெளியுறவுத்துறை செயலர் செல்வி **Sewa Lamsal** அழைப்பின் பேரில் திரு. விக்ரம் மிஸ்ரி இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

**>>>>><<<<<**

இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் தமிழக மீனவர்கள் 4 பேர் காயமடைந்தனர்.

நாகை மாவட்டம், ஆற்காட்டுத்துறை மீனவர்கள், கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இந்த தாக்குதல் சம்பவம் நிகழ்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 49 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழ் வளர்ச்சித்துறையில் உள்ள உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு முதுநிலை தமிழ் பட்டப் படிப்பு பயின்ற 50 சதவீதம் பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் கூறியுள்ளார்.

பொள்ளாச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - சாமிநாதன் 26 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சிறந்த நெசவாளருக்கான விருது தமக்கு வழங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நெசவாளர் திரு. பாலசுப்பிரமணியன் கூறியுள்ளார்.

தேசிய கைத்தறி தினத்தை ஒட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமக்கு இந்த விருது வழங்கப்பட்டதாகவும் அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பாலசுப்பிரமணியன் 26 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் மூன்றாம் கட்ட அகழாய்வில் சுடுமண்ணால் ஆன சதுரங்க ஆட்டக்காய்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

முன்னோர்கள் பொழுதுபோக்கிற்காக சதுரங்க விளையாட்டில் ஈடுபட்டது இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - கமலக்கண்ணன் 44 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசத்தில் அடுத்த 5 தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம் மற்றும் திரிபுரா மாநிலங்களிலும் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் கேரளாவுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை மறுநாள் வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, தில்லியில் பெய்த கனமழை காரணமாக, தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்தது.

குருகிராமிலும் பல பகுதிகள் வெள்ளநீரால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தின் உயரிய விருது, இந்தியாவின் **Abhinav Bindra**-வுக்கு வழங்கப்பட்டது.

பாரிஸில் நேற்று நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தின் அமர்வில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

ஒலிம்பிக் இயக்கத்திற்கு அளித்த அளப்பரிய பங்களிப்பிற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

இந்திய நேரப்படி நள்ளிரவு 12.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்த நிறைவு நிகழ்ச்சியின் போது நடைபெறும் வீரர்கள் அணிவகுப்பில், இந்தியாவின் தேசியக்கொடியை மனுபாக்கரும், **Sreejesh**-ம் ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடல் - பாடல் என பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் இந்த நிறைவு நிகழ்ச்சி 2 முதல் 3 மணி நேரம் வரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒலிம்பிக் போட்டியில் 39 தங்கம் உட்பட 90 பதக்கங்களுடன் சீனா முதலிடத்திலும், 38 தங்கம் உட்பட 122 பதக்கங்களுடன் அமெரிக்கா 2வது இடத்திலும், 18 தங்கம் உட்பட 50 பதக்கங்களுடன் ஆஸ்திரேலியா 3வது இடத்திலும் உள்ளன.

இந்தியா ஒரு வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களுடன் 71வது இடத்தில் உள்ளது.

>>>>><<<<<

இங்கிலாந்து ஓப்பன் ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sugi Sai Bala Singa Gopinath Singh** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-9, 21-13 என்ற செட்கணக்கில் **Wales-**ன் **Harper Leigh-**ஐ வென்றார்.

>>>>><<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>**END**<<<<<